# Maruthakasi – மருதகாசி

மருதகாசி ( Maruthakasi, பெப்ரவரி 13, 1920 - நவம்பர் 29, 1989) தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் ஆவார். 1949 இல் பாடல்கள் எழுதத் தொடங்கிய இவர் சுமார் இருநூற்று ஐம்பதிற்கும் அதிகமான திரைப்படங்களுக்கு நாலாயிரத்திற்கும் அதிகமான பாடல்கள் எழுதியுள்ளார்.

## வாழ்க்கைக் குறிப்பு

அரியலூர் மாவட்டம் மேலக்குடிகாடு கிராமத்தில் பிறந்தவர் மருதகாசி. தந்தை பெயர் அய்யம்பெருமாள் உடையார் தாயார் மிளகாயி அம்மாள். உள்ளூரில் தொடக்கக் கல்வி பயின்றபின் , ஆறாம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரை கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் பயின்றார்.கும்பகோணம் அரசுக் கல்லூரியில் சேர்ந்து, உயர் கல்வி கற்றார். 1940 ஆம் ஆண்டில் திருமணமான இவரின் மனைவி பெயர் தனக்கோடி அம்மாள். மருதகாசிக்கு 6 மகன்கள், 3 மகள்கள்.

## நாடகப் பாடல்கள்

மருதகாசி, சிறு வயதிலேயே கவிதை எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்தார். கல்லூரிப் படிப்புக்குப் பிறகு , குடந்தையில் "தேவி நாடக சபை"யின் நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதி வந்தார். மு. கருணாநிதி எழுதிய மந்திரி குமாரி போன்ற நாடகங்களுக்குப் பாடல் எழுதினார். கவிஞர் கா. மு. ஷெரீபின் நாடகக் குழுவுடன் இணைந்து பணியாற்றினார். இக்குழுவில் இசையமைத்த திருச்சி லோகநாதனின் மெட்டுகளுக்கும் பாடல்கள் எழுதிவந்தார். பாபநாசம் சிவனின் சகோதரரும் , பாடலாசிரியருமான இராஜகோபாலய்யரிடம் உதவியாளராக இருந்தார்.

| | |
|---|---|
| புலவர் | மருதகாசி |
| பிறப்பு | அரியலூர் மாவட்டம் – மேலக்குடிகாடு |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| பெற்றோர் | அய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள் |
| காலம் | 1920 – 1989 |
| பெற்ற பட்டம் | கலைமாமணி |

## ஆசிரியர் குறிப்பு

- அரியலூர் மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு என்ற ஊரில் பிறந்தவர்.
- இவர் பெற்றோர் அய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள்
- இவரது சிறப்பு பெயர் மருதகாசி
- திரைக்கவித் திலகம் அ மருதகாசி பாடல்கள் என்னும் தலைப்பில். திரைக்கதைகளுக்குஎழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டள்ளன.
- அதில் உழவும் தொழிலும் , தாலாட்டு, சமூகம், தத்துவம், நகைச்சுவை என்னும் தலைப்புகளில் பாடல்கள் வகைப்படுதித்தித் தரப்பட்டுள்ளன.
- “கலைமாமணி” பட்டம் 1949-ல் பெற்றார்.

## மேற்கோள்

பொதியை ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு – செல்லக்கண்ணு
நீயும் வித்துப்போட்டுப் பணத்த எண்ணு
செல்லக்கண்ணு.
-பாடலாசிரியர் மருதகாசி


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in